# வாக்குமூலம்
## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்–I, கொடைக்கானல்.
## C.C.No. 18/2023
## வழக்கு சாட்சி PW.6

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : **மாடசாமி** | தொழில் | : சுயதொழில் |
| தகப்பனார் பெயர் | : ஆறுமுகம் | கணவர் பெயர் | : ------ |
| கிராமம் | : குப்பம்மாள்பட்டி | இனம் | : ஆண் |
| தாலுகா | : கொடைக்கானல் | வயது | : 43/2026 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | நாள் | : 22.05.2026 |

**( எதிரி மனுவின்பேரில் ஆஜரில் இல்லை)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் குப்பம்மாள்பட்டியில் வசித்து சுயதொழில் செய்து வருகிறேன். புகாதாரர் செல்வத்தை எனக்குத் தெரியும் . எதிரி தங்கவேல் மகன் முருகேசனைத் தெரியும் . வழக்கு குறித்து எனக்கு எந்த விபரமும் தெரியாது . நான் சாட்சியாக சேர்க்கப்பட்டுள்ள விபரம் போலீசார் என்னை இந்த நீதிமன்றத்திற்கு அழைத்ததன்பேரில் தான் எனக்குத் தெரியவந்தது.

**<u>அரசு தரப்பில் மேற்கண்ட சாட்சியை பிறழ் சாட்சியாக பாவிக்குமாறு கேட்டுக் கொண்டதற்கிணங்க நீதிமன்ற அனுமதியுடன் மேற்கண்ட சாட்சி அரசுத் தரப்பால் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.</u>**

18.11.2023ம் தேதி இரவு 08.30 மணியளவில் நானும் , செந்திலும் சிவம் மளிகைக்கடையில் நின்று பேசிக்கொண்டிருந்தபோது குன்றுக்காட்டு வளைவரையைச்

சேர்ந்த ஆறுமுகம் மற்றும் வேங்கடிஏற்றத்தைச் சேர்ந்த முருகேசனிடம் பணத்தை கொடு என்று கேட்டுக்கொண்டிருந்தார் என்றாலும் , அப்போது செல்வம் முருகேசனைப் பார்த்து என் மகனிடம் வாங்கிய பணத்தை கொடுத்துவிடு என்று முருகேசனிடம் சொன்னபோது முருகேசன் செல்வத்தை ஆபாசமாக திட்டி கீழேத் தள்ளி மாறி மாறி அடித்தார்கள் என்றாலும், இச்சம்பவத்தை பார்த்த நான் சத்தம் போட்டு சண்டையை விலக்கிவிட்டேன் என்றாலும் , அப்போது எதிரி முருகேசன் அவரது இடுப்பில் வைத்திருந்த கத்தியைக் காட்டி செல்வத்திற்கு கொலை மிரட்டல் விடுத்தார் என்றால் சரியல்ல. எதிரி கேட்டுக்கொண்டதன்பேரில் வழக்கிற்கு ஆதரவாக, வழக்கிற்கு விரோதமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court and
read over to the witness and acknowledged
by him/her to be correct.

R ARUN PANDIAN

Digitally signed by R ARUN PANDIAN
Date: 2026.05.22 14:59:51 +0530

District Munsif Cum Judicial Magistate No.I,
Kodaikanal.